மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 27 வெள்ளிக்கிழமை 27.12.2024 கதிர் 78

# மகிழ்ச்சியான வாழ்க்கையே அரசாங்கத்தின் இலக்கு!

## - பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய -



**(கொழும்பு, டிச. 27)**

**எந்தவொரு பேதங்களும் இன்றி மகிழ்ச்சியான பண்புமிக்க வாழ்க்கையை வாழ்வதற்கு பொருத்தமான சூழலை அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்கு என பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ரூபா 22 பில்லியன் சீன நிதியுதவியின் கீழ் இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கப்படும் வீடமைப்பு திட்டத்தின் முதற்கட்டதுக்கான ஆரம்ப நிகழ்வு மொரட்டுவ, பெடரிவத்த பகுதியில் இன்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில்

7➤

## யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம், டிச. 27

இந்த முறை யாழ்ப்பாணத்தில் தேசிய தைப் பொங்கல் விழாவை நடத்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் தேசிய தைப்பொங்கல் விழாவை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று (26) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வருடாந்தரம் ஏற்பாடு செய்யப்படும் சபரிமலை யாத்திரைக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகளவிலான பக்தர்களை இணைத்துக் கொள்ளவும், அதற்கு அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அனுசரணையைப் பெற்றுத்தருமாறும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அமைச்சர் ஹினிதும சுனில் செனவி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

(ஐ)

# ஆயுதப்படையினரை களமிறக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, டிச. 27

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும், பொது ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஆயுதப்படையினரை அழைக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய ஆயுதப்படைகள் அழைக்கப்பட்டுள்ளன.

அதற்கு அமைய, இன்று (27) முதல் அமுலுக்கு வரும்வகையில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கும் உத்தரவு அடங்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியானது. (ஐ)



# 17 கடவுச்சீட்டுகளுடன் தலைமறைவான நபர்!

கொழும்பு, டிச. 27

பிரதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சுனில் வட்டகலவையும், அவரது அமைச்சின் அதிகாரிகளையும் பணியாளர்களையும் ஏமாற்றிவிட்டு 17 புதிய கடவுச்சீட்டுகளுடன் தப்பியோடியதாக தெரிவிககப்பட்டுள்ளது.

தனது அலுவலகத்திற்கு தான் முதல்தடவை விஜயம் மேற்கொண்டவேளை இந்த சம்பவம் இடம்பெற்றது என அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பிரதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதி அமைச்சரை ஏமாற்றி 17 கடவுச்சீட்டுகளுடன் தலைமறைவான நபர்! ; னுநிரவல ஆமைெளைவநச யுடிளஉழனெநன றுவைா 17 நேறீயளளிழசவள

நான் அமைச்சின் அலுவலகத்திற்குள் முதல்தடவை நுழைந்ததும், நபர் ஒருவர் என்னை அமைச்சின் பல பிரிவுகளிற்கு அழைத்து சென்று காண்பித்தார். நான் அவர் அமைச்சை சேர்ந்தவராகயிருப்பார் என நினைத்தேன்.

ஆனால் அவர் தன்னை ஜனாதிபதி செயலகம் பிரதியமைச்சரின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுவதற்காக அனுபபியதாக அமைச்சரவை பணியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் தேநீர் விருந்துபசார நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது, அந்த நபர் அதனை ஏற்பாடு செய்வதில் மும்முரமாக செயற்பட்டார். கடவுச்சீட்டை தயாரிக்கும் பகுதிக்கு என்னை அழைத்துச்சென்ற நபர் இதுவரை எந்த அமைச்சரும் அங்கு வரவில்லை என குறிப்பிட்டார்.

மறுநாள் எனது

7➤

# கடலில் மூழ்கிய ஐந்து வெளிநாட்டு பிரஜைகள் மீட்பு

கொழும்பு, டிச. 27

ஹிக்கடுவை, நரிகம சுற்றுலா கடற்கரையில் நீராடச்சென்ற போது நீரில் அடித்துச்செல்லப்பட்ட நான்கு சிறுவர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் ஐவர் பொலிஸ் உயிர்காப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நான்கு குழந்தைகள் மற்றும் ஒரு பெண் மீட்கப்பட்டதாகவும், அவர்கள் ரஷ்ய மற்றும் கொலம்பிய பிரஜைகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழுவினர் இன்று கடலில் நீராடியபோது கடலலையில் சிக்கி அடித்து செல்லப்பட்டனர்.

சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் மற்றும் ஏழு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உடனடியாக தலையிட்டு குழுவினரை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

இதன்போது மீட்கப்பட்டவர்கள் 12, 09 மற்றும் 04 வயதுடைய குழந்தைகளும் அடங்குவர் எனவும் தெரிவிக்கபப்ட்டுள்ளது. (ஐ)

## அரிசி தட்டுப்பாடு: வெளியான தகவல்

கொழும்பு, டிச. 27

நாட்டில் நிலவி வரும் அரிசி தட்டுப்பாட்டுக்கு எப்போது தீர்வு வழங்கப்படும் என்பது குறித்து அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் தற்பொழுது அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை நீடித்து வருவதனை ஏற்றுக்கொள்வதாக பிரதி அமைச்சர் ருவான்செனரத் தெரிவித்துள்ளார்.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் இன்னும் ஒரு மாதம் வரையில் இந்தத் தட்டுப்பாட்டு நிலைமை நீடிக்கும் என பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# மின்மாற்றிகளில் கம்பித் திருட்டு மின்சாரம் தாக்கி ஒருவர் சாவு!

(அம்பாறை, டிச. 27)

அம்பாறை நகரில் மின்மாற்றிகளின் கம்பிகளை திருட முயற்சி செய்த நபர் 30 ஆயிரம் வோல்ட் உயர் மின்னழுத்த தாக்குதலில் உயிரிழந்துள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது :

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் அம்பாறை மின்சாரம் விநியோகிக்கப்படும் இடத்தில் காணப்படும் செப்புக் கம்பியை வெட்டுவதற்காக வந்துள்ளார்.

இவ்வாறு கம்பியை வெட்ட முயன்றபோது மின்சாரம் தாக்கி குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக அருகில் உள்ள கிராம மக்கள் கூறுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அருகில் இருந்தவர்கள் மின்சார சபை ஊழியர்கள் மற்றும் பொலிஸாருக்கும் தகவல் கொடுத்து அவர்கள் அங்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதையடுத்து குறித்த நபரை மீட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மின்சார சபையினால் இயக்கப்படும் மின்மாற்றிகளை தரையுடன் இணைக்கும் புவித் தொடுப்பு கம்பியை (நுயசவா றுசைந) சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சில குழுவினர் வெட்டி அகற்றிச் சென்றுள்ளனர்.

இது குறித்து அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குற்றப் புலனாய்வுப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் உபுல் குமாரகேவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மின்சார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தமைக்கு அமைய, அம்பாறை நகரைச் சுற்றியுள்ள மின்மாற்றிகளைச் சோதனை செய்த மின்சார சபை அதிகாரிகள் 17 மின்மாற்றிகளின் புவித் தொடுப்பு கம்பிகள் இவ்வாறு வெட்டப்பட்டு களவாடப்பட்டுள்ளதை கண்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து, 17 கம்பிகள் இவ்வாறு களவாடப்பட்டுள்ளதாக மின்சார சபையின் பிராந்திய மின் பொறியியலாளர் பிரபாத் செனவிரத்ன அம்பாறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மின்மாற்றியில் இருந்து தரையுடன் இணைக்கப்பட்ட புவித் தொடுப்பு கம்பிகள் செம்பினால் செய்யப்பட்டவை என பதோடு, அதிலுள்ள செம்பை எடுத்து விற்பனை செய்ய முயற்சி செய்திருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

அம்பாறை நகர எல்லைக்குட்பட்ட நவகம்புர, தொழில்நுட்ப பிரதேசம், சாமபுர, சத்ததிஸ்ஸபுர, கெமுனுபுர, திஸ்ஸபுர ஆகிய கிராமங்களின் மின்மாற்றிகளில் இவ்வாறு புவித் தொடுப்பு கம்பிகள் வெட்டப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் அம்பாறை நவகம்புர பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அம்பாறை தலைமையகப் பொலிஸ் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-06)

# திருமலைக் கடலில் ஆளில்லா விமானம்!

(திருகோணமலை, டிச. 27)

திருகோணமலை கடலில் சிறிய ரக ஆளில்லா விமானம் ஒன்று மிதப்பதை நேற்று வியாழக்கிழமை அதிகாலை அவதானித்த மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து கடற்படையினர் அந்த விமானத்தை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்ததாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் எரந்த கினகே தெரிவித்தார்.

திருகோணமலை கரையில் இருந்து சுமார் 35 கடல் மைல் தொலைவில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது கடலில் சிறிய ரக விமானம் மிதப்பதை கண்ட மீனவர்கள் அதனைக் கைப்பற்றி தமது படகில் இணைத்து கொண்ட பின்னர் கடற்படையினருக்குத் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற கடற்படையினர் விமானத்தை மீட்டுக் கரைக்கு கொண்டுவந்தனர்.

இந்த விமானம் ஆளில்லா விமானம் என்பதுடன் இந்த வகை விமானம் 2020 ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சுமார் 40 கிலோ எடையுடையது என்றும் விமானத்தில் வெடிபொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட இந்த விமானம் எப்படி வந்தது?, ஏன் வந்தது? தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் எரந்த கினகே மேலும் தெரிவித்தார். (ஐ)

# கடலில் நீராடச் சென்ற தந்தை – மகன் சடலமாக மீட்பு



கொழும்பு, டிசெ 27

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன் கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை மகன் மற்றும் அவரது உறவினரான சிறுவன் உட்பட 3 பேர் கடல் அலையால் இழுத்துச் சென்று காணாமல் போன நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை விநாயகபுரம் மங்கமாரி கடற்கரையில் சடலங்களாக ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொத்துவில் சங்கமன் கண்டியைச் சேர்ந்த 38 வயதுடைய மயிலவாகனம் நந்தராஜ், அவருடைய 15 வயதுடைய மகன் டினுஜன் மற்றும் சகோதரியின் மகனான 17 வயதுடைய கிரிஷோர் ஆகிய மூவரும் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்து பிரதேசத்தைச் சேர்ந்த மூவரும் சம்பவ தினமான புதன் கிழமை (25) மாலையில் நத்தார் பண்டிகையையிட்டு கடலில் நீராடச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கட லில் நீராடிய இருவர், கடல் அலையால் இழுத்துச் செல்லப் படதையடுத்து அவர் களை காப்பாற்ற கடலில் குதித்த தந்தையையும் கடல் அலை இழுத்துச் சென்றுள்ளது.

இதனை தொடர்ந்து காணாமல் போன வர்களை உறவினர்கள், கடற்படை மற்றும் பொலிஸாருடன் இணைந்து தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நிலையில் விநாயகபுரம் மங்கமாரி கடற்கரை பகுதியில் நேற்று காலையில் முதலில் 17 வயது சிறுவனின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது

இதனையடுத்து சிலமணி நேரத்தின் பின்னர் ஒன்றின் பின் ஒன்றாக இருவரது சடலமும் கரையொதுங்கியதையடுத்து சடலங்கள் மீட்கப்பட்டு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# போதை பொருட்களுடன் இளைஞன் கைது



கொழும்பு, டிசெ 27

நுவரெலியா (ரேறயசய நுடலையை) - ஹவஎலிய பகுதியில் சட்டவிரோத போதை பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த கைது நடவடிக்கையானது நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, 34 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த நபரிடமிருந்து கஞ்சா கலவை செய்யப்பட்ட 300 மதனமோதகம் போதை மாத்திரைகள் பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், எவ்வித அனுமதிப்பத்திரமும் இன்றி சட்ட விரோதமாக நடத்தி வந்த ஆயுர்வேத மருந்தக விற்பனை நிலையம் ஒன்றிலே குறித்த மதனமோதக போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(ஐ)




# போக்குவரத்துத்துறையில் நட்டங்களை வெளிப்படுத்திய கணக்காய்வாளர்

கொழும்பு, டிசெ 27

கோட்பாட்டை மீறி எட்டு தொழிற்சங்கங்களுக்கு 138 திறந்த பயண அனுமதிச் சீட்டுகளை வழங்கியதால், 2023 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சுமார் 43 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் தொடருந்து திணைக்களத்தினால், இந்த தொழிற் சங்கங்களுக்கு 22 இலவச தொடருந்து பயண அனுமதிச் சீட்டுகளை ஒதுக்கியதன் விளைவாக, அதே ஆண்டில் அரசாங்கத்திற்கு 25 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கூறுகிறது.

நாடு முழுவதும் வழங்கப்படும் இந்த இலவச பயண அனுமதிச் சீட்டுகளை பெறுவதற்கு தொழிற்சங்க அதிகாரிகளுக்கு உரிமை உண்டு.

இருப்பினும், எட்டு தொழிற்சங்கங்களுக்கு 138 பயண அனுமதிச் சீட்டுகளை வழங்குவது அனுமதிக்கப்பட்ட வரம்பை கணிசமாக மீறிய செயல் என்றும், இது, கணிசமான நிதி இழப்புகளுக்கு வழிவகுத்தது என்றும் கணக்காய்வாளர் நாயகம் கண்டறிந்துள்ளார்.

(ஐ)

# வட மாகாண விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்த நடவடிக்கை

கிளிநொச்ச, டிசெ 27

விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பை தொடர்ச்சியாக பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயம் தொழில்முறை சார்ந்ததாக மாற்றப்பட வேண்டும் என்பதுடன் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என ஆரம்ப உரையில் குறிப்பிட்ட மாவட்டச்செயலர் சு.முரளிதரன், விவசாயிகள் நெல்லுடன் பணப் பயிர்களையும் செய்யவேண்டும் எனக் கோரினார்.



தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஆளுநர், முன்னைய காலங்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை நினைவுகூர்ந்ததுடன் தற்போது அவை அருகிச் செல்வதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் விவசாயத்துடன் தொடர்புடைய அலுவலர்கள் களத்துக்குச் சென்று விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

சியாப் திட்டத்தின் கீழ் எமது மாகாணத்துக்கு அடுத்த ஆண்டு 100 கோடி ரூபா நிதி கிடைக்கவுள்ள நிலையில் அதை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும் எனத் தெரிவித்த ஆளுநர், எந்தவொரு காரணத்துக்காகவும் அந்த நிதி செலவழித்து முடிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்று குறிப்பிட்டார்.

விவசாய மற்றும் நீர்பாசனத் துறையுடன் தொடர்புடைய திணைக்களத்தலைவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக்கூறியதுடன் அதற்குரிய தீர்வுகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறிப்பாக ஏ.எஸ்.எம்.பி. திட்டத்தின் கீழ் 4 பயிர்களின் செய்கை (மிளகாய், கச்சான், பஷன் புருட், மாதுளை) ஏற்றுமதி நோக்கில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன் முன்னேற்றம் மற்றும் சவால்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் எவ்வாறு வினைத்திறனான கொண்டு செல்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அதிகளவான விவசாயிகள் எதிர்காலத்தில் இந்தப் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டுமாயின் சந்தை வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தினார்.

வடக்கில் 17 கமக்கார நிறுவனங்கள் (குயசஅநச உழஅியலெ) இந்தப் பயிர்ச்செய்கைக்காக உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அதன் ஊடாக இதைத் தொடர்ந்து சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பன முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

நீர் முகாமைத்துவத்துக்கான நியதிச் சட்டங்கள் - கட்டமைப்புக்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு விவசாய அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டதுடன், இதன் காரணமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர்கள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

விவாயத்துறை மேம்பாடு மற்றும் நவீனமயப்படுத்தலுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்ப்பதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# யாழில் மூன்று மாத குழந்தை உயிரிழப்பு

தெல்லிப்பழை, டிசெ 27

பிறந்து மூன்று மாதங்களே நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

பன்னாலை - தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த பங்கஜன் சிறீதிகன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குழந்தைக்கு கடந்த 24ஆம் திகதி காய்ச்சல், இருமல், சளி ஏற்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, அதற்கு சிகிச்சை வழங்குவதாக பெற்றோர் குழந்தையை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், குழந்தைகளுக்கு சுவாசப் பிரச்சினை ஏற்பட்டவேளை மேலதிக சிகிச்சைக்காக குழந்தை நேற்று (25) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்ட நிலையில் இருதய செயலிழப்பு காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஐ)

# உடலில் ஊசியை செலுத்தி கொலை

கொழும்பு, டிசெ 27

70 வயதுடைய பெண் ஒருவரை விச ஊசி போட்டு கொலை செய்த வழக்கில் தேடப்பட்டு வந்த ஒருவரை திக்வெல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.




அடையாளம் தெரியாத ஒருவர், குறித்த பெண்ணை அவரது வீட்டிற்கு அருகில் வைத்து சந்தித்ததுடன் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது ஊசியை பெண்ணின் உடலில் செலுத்தியுள்ளார். இதன பின்னர் அவர் பகுதியை விட்டு உந்துருளியில் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட பெண் உடனடியாக தனது அண்டை வீட்டாருக்குத் தகவல் தெரிவித்து, மாத்தறையில் உள்ள பதீகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மாத்தறை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு நான்கு நாட்கள் சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இதனையடுத்து குறித்த கொலை தொடர்பாக திக்வெல்ல பொலிஸார் விசாரணை நடத்தினர்.

அதேநேரம் இது தற்போது நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரும் காணிப்பிரச்சினையுடன் தொடர்புடைய கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகம் உறவினர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்தநிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளும் பொலிஸார், அடையாளம் தெரியாத ஆணின் சிசிடிவி காட்சிகளைக் கொண்டு, அந்தப் பெண்ணைச் சுற்றி இடம்பெற்ற சம்பவங்களை கண்டறிந்துள்ளனர்.

இதன்படி கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் கைது செய்யப்பட்டு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வவுனியாவில் மரக்கடத்தலில் ஈடுபடும் பொலிஸார்

கொழும்பு, டிசெ 27

வவுனியா பூவரசன்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள இரணை இலுப்பைக்குளம் பகுதியிலுள்ள வன இலகா பகுதியில் கடந்தவாரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் பெரியளவில் மரக்கடத்தல் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



இது குறித்து மக்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலங்குளம், இரணை இலுப்பைக்குளம் வன இலகாப் பகுதியில் பூவரசன்குளம் பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரியின் அறிவுறுத்தலிற்கு அமைவாக வன இலாகப்பகுதியில் பாரிய மரங்கள் வெட்டப்பட்டு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கடமைக்காகவும் பொறுப்பதிகாரியை காப்பாற்றுவதற்காகவும் சிலரை சந்தேகத்தினடிப்படையில் கைது செய்துள்ளனர்.

இம்மரக்கடத்தலின் பிரதான குற்றவாளியான பூவரசன்குளம் பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரிக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முறைப்பாடு குறித்து பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கும் முறைப்பாடு மேற கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருந்து தட்டுப்பாட்டு: மறுத்துள்ள அரச மருந்துக் கூட்டுத்தாபனம்



கொழும்பு, டிசெ 27

நாட்டில் மருந்துப் பொருட்களுக்கோ அல்லது தரம் குறைந்த மருந்துகளுக்கோ தட்டுப்பாடு இல்லை என அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்திய நிபுணர் மனோஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மருந்து கொள்முதல் செயல்பாட்டில் உள்ள சிக்கல்களுக்கு தற்போது நிலவும் நிலையற்ற தன்மை மற்றும் அரசியல் தலையீடுகள் காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

அவரது இந்த கருத்துக்கு பல்வேறு தரபபினரும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நாட்டில் மருந்து மாபியா ஒன்று இயங்கி வருவதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காலமானார்!



முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் (92), உடல்நிலை பாதிப்பு காரணமாக , டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்மோகன் சிங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியானது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவரை பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் சென்று பார்த்தனர்.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் சிகிச்சை பலனின்றி காலமானார்.

2004 முதல் 2014 வரை பிரதமராக இருந்த மன்மோகன் சிங், இந்த ஆண்டு தொடக்கத்தில் மாநிலங்களவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

33 ஆண்டுகளுக்கு முன்பு 1991ல் மாநிலங்களவையில் சிங் தனது அரசியல் பயணத்தை தொடங்கினார். பி.வி.நரசிம்மராவ் அரசின் கீழ் மத்திய நிதி அமைச்சராக பதவியேற்றார்.

## நிதிஷ்குமார் கட்சியுடன் கூட்டணி அமைக்க லாலு கட்சி மீண்டும் தீவிரம்!



பீகாரில் முதல்-மந்திரி நிதிஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய கூட்டணி ஆட்சியில் உள்ளது. ராஷ்ட்ரீய ஜனதாதளம் தலைமையிலான கூட்டணி எதிர்க்கட்சியாக உள்ளது. அடுத்த ஆண்டு பீகார் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதல்-மந்திரி வேட்பாளர் குறித்து கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என அண்மையில் அமித் ஷா பேசியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முதல்-மந்திரி நிதிஷ் குமாரை ஓரங்கட்ட பா.ஜ.க. தலைமை முடிவெடுத்து விட்டதாக தகவல்கள் பரவின. 'பீகார் என்று வரும்போது, நிதிஷ் குமாரின் பெயரை மட்டுமே முதல்வராக குறிப்பிட வேண்டும்' என்ற பதிவுகள் ஐக்கிய ஜனதா தளத்தின் எக்ஸ் பக்கத்தில் பகிரப்பட்டன.

இதைத் தொடர்ந்து, டெல்லியில் உள்ள பா.ஜ.க. தலைமையகத்தில் நிருபர்களை சந்தித்த மாநில துணை முதல்வரும் பா.ஜ.க. பொதுச் செயலருமான சாம்ராட் சவுத்ரி, 'பீகாரில் நிதிஷ் குமார் தலைமையில் பா.ஜ.க. கூட்டணி தேர்தலை எதிர் கொள்ளும். இதில் எந்த குழப்பமும் இல்லை' என்றார்.

ஆனால், பா.ஜ.க.வை சேர்ந்த பீகாரின் மற்றொரு துணை முதல்வரான விஜய் குமார் சின்கா, பீகாரில் பா.ஜ.க. ஆட்சி அமைத்தால் மட்டுமே வாஜ்பாயின் கனவை நனவாக்க முடியும் என்று வாஜ்பாய் பிறந்த நாள் விழாவில் தெரிவித்தார்.

இதையடுத்து, நிதிஷ் குமார் தலைமையில்தான் பீகார் தேர்தலில் போட்டி என்பதை மாநில பா.ஜ.க. தொடர்ந்து உறுதி செய்து வருகிறது. நிதிஷ் குமாரின் எதிர்ப்பாளராக முன்பு அறியப்பட்ட மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங், அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார். இந்நிலையில், ராஷ்டீரிய ஜனதாதளம் தலைவர் லாலு பிரசாத் யாதவுக்கு நெருக்கமான வராக அறி யப்படும் எம்.எல்.ஏ. பாய் வீரேந்திரா நிருபர்களிடம் கூறுகையில், 'பீகாரில் பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வரும் காலங்களிலும் இதுபோன்ற மாற்றங்கள் நிகழலாம். அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் அமைந்தது ஆகும். வகுப்புவாத சக்தியான பா.ஜ.க.வுடன் தனது கூட்டணியை முறித்துக் கொள்ள நிதிஷ் குமார் முடிவு செய்தால், அவருடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம் என்று தெரிவித்தார்.

நிதிஷ்குமார் ஏற்கனவே ராஷ்டீரிய ஜனதா தளம் கட்சியுடனான மகா பந்தன் கூட்டணியில் இருந்தார். கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது அதில் இருந்து வெளியேறி பா.ஜ.க. கூட்டணியில் சேர்ந்தார். இந்த நிலையில் நிதிஷ்குமார் கட்சியுடன் கூட்டணி அமைக்க லாலு பிரசாத்தின் ராஷ்டீரிய ஜனதா தளம் தீவிரம் காட்டி வருகிறது.



## முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு நேரில் சென்று மரியாதை செலுத்திய மோடி!

2004-ம் ஆண்டு முதல் 2014-ம் ஆண்டு வரை 10 ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்தவர் மன்மோகன் சிங்.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். அதன் பிறகு தீவிர அரசியலில் இருந்து விலகி வீட்டில் ஓய்வில் இருந்து வந்தார்.

ஏற்கனவே இருமுறை இருதய அறுவை சிகிச்சை செய்து இருந்த மன்மோகன் சிங், வயோதிபம் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு அவ்வப்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று இரவு வீட்டில் இருந்த அவருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

மயங்கிய நிலையில் இருந்த அவரை அவரது குடும்பத்தினர் உடனடியாக டெல்லி எய்ம்ஸ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர். தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட மன்மோகன் சிங் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு 9.51 மணிக்கு மரணம் அடைந்தார். அவருக்கு வயது 92.

இந்நிலையில் அவரது மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்திய அரசு அவரது மறைவுக்கு 7 நாட்கள் தூக்கம் அனுசரிக்கிறது. மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு நாளை நடைபெறும் என காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் தகவல் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே டெல்லியில் உள்ள மன்மோகன் சிங்கின் இல்லத்தில் அவரது உடலுக்கு பிரதமர் நரேந்திர மோடி இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அவருடன் உள்துறை அமைச்சர் அமித்ஷா, மத்திய அமைச்சர் ஜேபி நட்டா ஆகியோரும் இறுதி மரியாதை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நல ஓய்வூதிய மோசடி: அரசு ஊழியர்கள் 38 பேர் இடைநீக்கம்!




கேரள மாநிலத்தில் மூத்த குடிமக்கள், விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாநில அரசு சார்பில் நல ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நல ஓய்வூதியத்தை அரசுத்துறைகளில் பணிபுரிந்து வரும் 1,458 பேர் மோசடி செய்து பெற்று வந்தது சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்களிடமிருந்து மோசடி பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மேலும் மோசடியில் ஈடுபட்டவர்களின் மீது துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் நல ஓய்வூதிய மோசடியில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் 38 பேரை 'இடைநீக்கம்' செய்து கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.

அவர்களில் 34 பேர் வருவாய்த்துறையிலும், 4 பேர் சர்வே மற்றும் நில ஆவண துறையிலும் பணிபுரிபவர்கள் ஆவர். இவர்கள்மொத்தம் ரூ.10 லட்சத்து 46 ஆயிரத்து 400 பணத்தை முறைகேடு செய்துள்ளனர். அந்த தொகையை 18 சதவீத வட்டியுடன் வசூலிக்கவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

# மைக்ரோ பிளாஸ்ரிக்:

## கண்ணுக்கு தெரியாத வில்லன்!



பிளாஸ்ரிக் பொருட்கள் சிதைவதால் உருவாகும் மிகச் சிறிய துணுக்குகள், செயற்கை நார்கள், பிளாஸ்ரிக் துகள்கள் , மருத்துவ நுண் பிளாஸ்ரிக் உபகரணங்கள் போன்ற மைக்ரோ பிளாஸ்ரிக்கானது கடல், நீர், நிலம் தொடங்கி காற்றில்கூட வியாபித்திருக்கின்றன. அதிகபட்சமாக 5 மில்லி மீற்றர் அளவில் (அரிசியின் அளவு) தொடங்கி கண்ணுக்கே புலப்படாத நுண்ணிய துகள்களாகவும் மைக்ரோ பிளாஸ்ரிக்குகள் இருக்கின்றன. இவற்றை உட்கொள்ளும் மீன்கள் போன்ற கடல் உயிரிகளால் உணவுச் சங்கிலி மூலம் மனிதர்களின் உடலிலும் பிளாஸ்ரிக் சென்றுசேர்கிறது.

மேலை நாடுகளில் பிளாஸ்ரிக் புழக்கம் அதிகரித்திருந்த காலகட்டத்தில், கடல்வாழ் உயிரிகள் ஆர்வலரான எட் கார்பென்ட்டர், வடக்கு அட்லாண்டோ கடற்கரைப் பகுதியில் உள்ள சர்காஸோ நதியில் வித்தியாசமான சில மாற்றங்களைக் கவனித்தார். நதியில் இருந்த பழுப்பு நிறப் பாசிகளின் மீது சிறுசிறு துணுக்குகள் படிந்திருந்தன. அவற்றைச் சோதனைக்கு உட்படுத்தியவருக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

அவை அனைத்துமே பிளாஸ்ரிக்குகள். பிறகு, கரையிலிருந்து 550 மைல்கள் தொலைவில் அட்லாண்டிக் கடலின் மத்தியிலும் இவற்றைக் கண்டெடுத்தார். கடலில் வீசப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பொருட்கள் பல நூறு சிறிய துண்டுகளாக மாறியிருந்தன.

பிளாஸ்ரிக்கின் சிறிய துணுக்குகளைக் கடல்வாழ் உயிரினங்கள் இரையாக நினைத்து உட்கொண்டுவிடுகின்றன. உடல் உறுப்புகள் சேதமாதல், சுவாசக் கோளாறு, உணவுச் சங்கிலி பாதிப்பு என அவை எதிர்கொள்ளும் இன்னல்கள் ஏராளம். அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியே கடுமையான பாதிப்புக்குள்ளாகி விடுகின்றன. மரணம் வரை இது நீள்கிறது.

2008 இல் மார்க்கஸ் எரிக்ஸனால் மீன்கள் உட்கொள்ளும் பிளாஸ்ரிக் குறித்த தகவல் வெளியிடப்பட்டது. வடக்கு பசிபிக் கடல் பகுதியில் இருந்த மீனின் உடலுக்குள் 18 துணுக்குகள் இருந்ததைப் படம் பிடித்தார் எரிக்ஸன். இது பெரும் அதிர்வலையை உருவாக்கியது. சிறிய பிளாஸ்ரிக் துணுக்குகளால் உயிரிகளுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்ற நம்பிக்கையை 2008 இல் மார்க் பிரவுனி மேற்கொண்ட ஆய்வு முடிவுகள் குலைத்துப்போட்டன.


அதைத் தொடர்ந்து, மைக்ரோ பிளாஸ்ரிக்குகள் தொடர்பாக உருவான விழிப்புணர்வு, மைக்ரோ பிளாஸ்ரிக்குகளால் உருவாகும் ஆபத்துகளை உணரத் தொடங்கியதும் தீவிரமாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கண்ணுக்குப் புலப்படாத இந்தச் சின்னஞ்சிறு துணுக்குகள் சுற்றுச்சூழலில் எங்கெங்கும் நிறைந்திருப்பதாகவும், கோடிக்கணக்கான பிளாஸ்டிக் துணுக்குகள் காற்றில் உழன்று கொண்டிருப்பதாகவும் ஆராய்ச்சி யாளர்கள் சொல்கிறார்கள்.

உணவுப் பொருட்களின் வழியாக, குடிக்கும் நீரின் வழியாக, சுவாசிக்கும் காற்றின் வழியாக என எல்லா வழிகளிலிருந்தும் இந்த மைக்ரோ பிளாஸ்ரிக்குகள் மனிதர்களை நோக்கிப் படையெடுத்துக்கொண்டிருக்கின்றன. மைக்ரோ பிளாஸ்ரிக்குகள் மேலும் சிதைந்து நானோ பிளாஸ்டிக்குகளாக மாறி, அது மேலும் கேடுவிளைவிக்கும் அச்சுறுத்தலாக நம்மைத் தாக்கக் காத்திருக்கின்றன. நாம் சுவாசிக்கும் நானோ பிளாஸ்ரிக்குகளால் நுரையீரல் பாதிப்பு ஏற்படும் அபாயம் குறித்து எச்சரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், இவை நம் உரையாடலுக்குள்ளேயே வரவில்லை.

கண்ணுக்கு ஸ்தூலமாகப் புலப்படும் திடக் கழிவுகளை மேலாண்மை செய்வதிலேயே நாம் தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையில், கண்ணுக்குப் புலப்படாத மைக்ரோ பிளாஸ்ரிக்குகளா உலகத்தலைவர்களின் கவனத்துக்கு வரப்போகிறது?

“மேலை நாடுகளில் பிளாஸ்ரிக் புழக்கம் அதிகரித்திருந்த காலகட்டத்தில், கடல்வாழ் உயிரிகள் ஆர்வலரான எட் கார்பென்ட்டர், வடக்கு அட்லாண்டோ கடற்கரைப் பகுதியில் உள்ள சர்காஸோ நதியில் வித்தியாசமான சில மாற் றங்களைக் கவனித்தார். நதியில் இருந்த பழுப்பு நிறப் பாசிகளின் மீது சிறுசிறு துணுக்குகள் படிந்திருந்தன. அவற்றைச் சோதனைக்கு உட்படுத்தியவருக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

அவை அனைத்துமே பிளாஸ்ரிக்குகள். பிறகு, கரையிலிருந்து 550 மைல்கள் தொலைவில் அட்லாண்டிக் கடலின் மத்தியிலும் இவற்றைக் கண்டெடுத்தார். கடலில் வீசப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பொருட்கள் பல நூறு சிறிய துண்டுகளாக மாறியிருந்தன.”



# மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹபீஸ் சயீத்தின் மைத்துனர் மாரடைப்பால் உயிரிழப்பு!



மும்பை தொடர் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் ஹபீஸ் சயீத். இவரது மைத்துனர் ஹபீஸ் அப்துல் ரஹ்மான் மக்கி. இவர் ஜமாத்-உத்-தவா என்ற தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் துணைத் தலைவராக இருந்து வந்தார்.

கடந்த சில நாட்களாக உடல்நலகுறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இன்று காலை மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக ஜமாத்-உத்-தவா தெரிவித்துள்ளார்.

கடந்த 2020-ம் ஆண்டு பயங்கரவாதிகளுக்கு நிதி அளித்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்பு நிதிமன்றம் ஹபீஸ் அப்துல் ரகுமான் மக்கிக்கு 6 மாதம் சிறைத் தண்டனை வழங்கியது. அப்துல் ரகுமான் மக்கி பாகிஸ்தான் சித்தாந்தத்திற்கு ஆதரவாளர் என பாகிஸ்தான் முதாஹிதா முஸ்லிம் லீக் தெரிவித்துள்ளது.

ஐ.நா. 2023-ம் அவரை சர்வதேச பயங்கரவாதி என அறிவித்தது. இவர் சொத்துகள் முடக்கம், பயணத் தடை ஆகிய தடைகளுக்கு உள்ளானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்தில் 2 பெண்கள் குத்திக்கொலை!



இங்கிலாந்து மில்டன் கெய்ன்ஸ் பிளெட்ச்சியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் புகுந்த 49 வயது மதிக்கத்தக்கவர் திடீரென கத்திக்குத்தில் ஈடுபட்டார். அந்த பகுதியில் வசித்து வந்த 38 வயது மற்றும் 24 வயதுடைய பெண்களை அவர் கத்தியால் குத்திக்கொன்றார். மேலும் சிலரையும் வெறித்தனமாக கத்தியால் குத்தினார்.

இதில் 20 வயது வாலிபர் உள்பட 2 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்தால் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த பொதுமக்கள் அச்சம் அடைந்தனர்.

இது பற்றி பொலிஸாருக்கு தெரிவித்த நிலையில் கத்திக்குத்து சம்பவத்தில் ஈடுபட்ட நபரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். அவர் ஏன் 2 பெண்களை குத்திக்கொன்றார் என தெரியவில்லை. முன்விரோதம் காரணமாக நடந்து இருக்கலாம் என கூறப்படுகிறது.

# இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் நூலிழையில் உயிர் தப்பிய உலக சுகாதார அமைப்பின் இயக்குநர்!





ஏமனில் உள்ள தலைநகர் சனா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று ஜவியாழக்கிழமைஸ இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் உலக சுகாதார அமைப்பின் (WHO) இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் நூலிழையில் உயிர் தப்பியுள்ளார்.

பாலஸ்தீனம் மீது நடத்திவரும் தாக்குதலை கண்டித்து ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அவ்வப்போது இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும் செங்கடலில் வரும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் கப்பல்களையும் சிறை பிடித்து வருகின்றனர். எனவே அமெரிக்கா உதவியுடன் ஹவுதிகள் மீது இஸ்ரேலும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கிடையே கைது செய்யப்பட்ட ஐ.நா ஊழியர்களை விடுவிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவும், ஏமனில் சுகாதர மற்றும் மனிதாபிமான நிலைமையை மதிப்பிடுவதற்கும் ஐ.நா இயக்குனர் ஜெனரல் டெட்ரோஸ் தலைமையிலான குழு ஏமன் சென்றது. பணிகளை முடித்து நேற்று சனாவில் இவர்கள் விமானம் ஏற இருந்தபோது அங்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தால் விமானத்தின் பணியாளர் ஒருவர் காயமடைந்ததுடன் மேலும் விமான நிலையத்தில் 2 பேர் தாக்குதலில் உயிரிழந்தனர். விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு கோபுரம், புறப்படும் இடம், ஓடுபாதை சேதமடைந்தன. நாங்கள் இருந்த இடத்திலிருந்து சில மீட்டர் தொலைவில் உள்ள இடமும் சேதமடைந்தது.

இது குறித்து டெட்ரோஸ் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிடுகையில் நானும் என்னுடன் இருந்த ஐ.நா மற்றும் உலக சுகாதர அமைப்பு அதிகாரிகளும் பாதுகாப்பாக உள்ளோம். நாங்கள் புறப்படுவதற்கு முன் விமான நிலையத்தின் சேதம் சரிசெய்யப்படும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும்.

தாக்குதலில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு எங்கள் மனமார்ந்த இரங்கல்கள் என்று

சனாவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் ஹூதிகள் பயன்படுத்திய உள்கட்டமைப்பு மற்றும் ஹொடைடா, அல்-சலிஃப் மற்றும் ராஸ் காண்டிப் துறைமுகங்கள் மற்றும் மின் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. ஆனால் எனது அறிக்கை பற்றிய கேள்விகளுக்கு இஸ்ரேல் பதிலளிக்கவில்லை என பதிவிட்டுள்ளார்.

ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்ததுடன், சர்வதேச சட்டம் மதிக்கப்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் மற்றும் மனிதாபிமான பணியாளர்கள் ஒருபோதும் குறிவைக்கப்படக்கூடாது என்றும் குறிப்பிட்டார். ஐநா பொதுச்செயலாளர் தங்கள் நாட்டுக்குள் நுழைய இஸ்ரேல் தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மருத்துவமனைக்கு அருகே வான்வழித் தாக்குதல்.. 5 பத்திரிகையாளர்களை கொன்ற இஸ்ரேல்!







பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிரித்து கடந்த வருடம் அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு அந்நாட்டில் ஆபரேஷன் அல்-அக்ஸா மூலம் திடீர் தாக்குதலை நடத்தியது. இதில் 1200 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 250 பேர் வரை பணய கைதிகளாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

தாக்குதலுக்கு பழிக்குப் பழி வாங்க கடந்த 13 மாத காலமாக காசா உள்ளிட்ட பாலஸ்தீன நகரங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி 45 ஆயிரத்துக்கும் அதிகமானோரை கொன்று குவித்துள்ளது. இதில் 1 லட்சத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 70 சதவீதம் பெண்களும் குழந்தைகளுமே என்று ஐநா தெரிவித்துள்ளது. இந்நிலையில் தற்போது மத்திய காசாவில் அகதிகள் முகாம் மற்றும் மருத்துவமனை மீது இஸ்ரேல் காசாவில் உள்ள அல் அவ்தா மருத்துவமனைக்கு அருகே இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 5 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.

மருத்துவமனை அருகே நுசிராத் அகதிகள் முகாமில் குட்ஸ் நியூஸ் நெட்வொர்க்கில் ஜஞரனள நேறளஸ பணியாற்றிய பத்திரிகையாளர்கள் படம்பிடித்து கொண்டிருந்தபோது, அவர்களின் வாகனம் மீது இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதல் நடாத்தியுள்ளது.

இதனால் காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 10 பேர் உயிரிழந்ததாகவும், 20 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 130க்கும் மேற்பட்ட பாலஸ்தீன செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. காசாவிற்குள் வெளிநாட்டு பத்ரிக்கையாளர்களை இஸ்ரேல் அனுமதிக்காதது குறிப்பிடத்தக்கது.

# மகிந்த உட்பட பலரை முடக்குவதில் அநுர அரசு தீவிரம்

கொழும்பு, டிசெ 27

மகிந்த உட்பட பலரை சர்வதேச ரீதியாக முடக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் திட்டமிடுவதாக கொழும்பு பல்கலைகழகத்தின் பொருளியல்துறை விரிவுரையாளர் எம்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். இலங்கையில் புதிதாக ஆட்சியமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியான தொடர்புகள் மிகக்குறைவு. இவ்வாறான சர்வதேச தொடர்புகள் அரசாங்கத்துடன் படிப்படியாக ஏற்படுத்தப்படும் போது, ஒரு கட்டத்தில் ஊழலில் ஈடுபட்ட முக்கியப் புள்ளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

இந்நிலையில், திருடப்பட்ட சொத்துக்களை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், அதற்கு அமெரிக்கா உதவ இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாட்டிலிருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீண்டும் நாட்டிற்கு கொண்டுவருவது இலகுவான காரியமில்லை என்றாலும் அது இயலாத ஒரு காரியமல்ல. படிப்படியாக முயற்சிப்பதன் மூலம் நிச்சயமாக இதனை செயற்படுத்த முடியும். (ஐ)

## அநுரவின் செயல்திட்டங்களை விமர்சித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்

கொழும்பு, டிசெ 27

தமிழ் மக்களுக்கான, அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாசைகள், தமிழ் மக்களை முன்னிறுத்துவதற்கான எந்தவிதமான செயல்திட்டங்களையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை என இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்துள்ளார். வரையறுக்கப்பட்ட குருமண்வெளி சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 37ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சாதனையாளர் பாராட்டு விழாவும், குருமண்வெளியில் அமைந்துள்ள அச்சங்கத்தின் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதன்போது, கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத்,

“எதிர்காலத்தில் அரசியல் உரிமையும், அரசியல் அபிலாசைகளும், அரசியலிலே தீர்மானிக்கின்ற சக்தியாக நமது மக்கள் வர இருக்கின்ற தேர்தல்களிலும் மிக மிக அவதானமாக எந்த விதமான அரசியல் நிகழ்ச்சி திட்டத்தின் மத்தியிலும் சரியான தீர்மானத்தை எடுப்பவர்களாக மக்கள் இருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் உரிமைகளுககாகவும், தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காகவும், தமிழ் மக்களின் எதிர்கால வாழ்க்கைக்காகவும் மிக உறுதியான கட்சியாக தமிழரசு கட்சியிருந்து கொண்டிருக்கின்றது.

அதன் வெளிப்பாடுதான் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே எனக்கு வாக்களித்த மக்களுக்கும் இந்த வேலையில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்திலும் அவ்வாறான உறுதியான நிலைப்பாட்டுடன் எனது மக்கள் நடந்து கொள்வார்கள் என நான் நம்புகின்றேன். இதன் மூலம் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதற்கும் நமது மக்கள் தொடர்ந்து உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்க வேண்டும்.

மக்கள் எதிர்காலத்திலே பல துறைகளிலும் வெற்றி அடைகின்ற போது அல்லது திறமைகளைப் பெற்றுக் கொள்ளுகின்ற போது அதில் திருப்தி அடைந்து விடக்கூடாது.

இன்னும் அத்துறைகளில் மேலும் அவற்றை அவற்றை சரியாக முன்கொண்டு செல்ல வேண்டும். அதனை எவ்வாறு இன்னும் மேம்படுத்த வேண்டும் போன்ற நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால்தான் இதுபோன்ற வரையறுக்கப்பட்ட சிக்கனம் மென்மேலும் வளர்ச்சி அடையும்” என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பொலிஸ் அதிகாரி ஒருவர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ 27

ஹபரணை - திருகோணமலை வீதியின் கல் ஓயா சோதனைச் சாவடியில், வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவர் டிப்பர் ரக வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம், நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

கந்தளே பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பொலிஸ் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் ரக வாகனம் ஒன்று, லொறி மற்றும் கார் மீது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் பொலிஸ் பரிசோதகர் படுகாயமடைந்த நிலையில் ஹபரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயி ரிழந்துள்ளார். மேலும், காரில் இருந்த ஒரு பெண் மற்றும் நான்கு மாத கைக்குழந்தை, மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் லொறியின் சாரதி ஆகியோர் ஹபரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இவ்விபத்து தொடர்பில் குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலக பணியாளர்கள் என்னை பாராட்டி ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கவேண்டும் என இந்த நபர் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்ற தகவல் எனக்கு கிடைத்தது.

அவர் எனது அலுவலக பணியாளராக பணியாற்றுவதற்கு பொருத்தமற்றவர் என எனக்கு தெரிவித்திருந்தனர். அதன் பின்னரே விசாரணைகளின் போது அந்த நபர் எனது அமைச்சுடன் தொடர்பில்லாதவர் என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட நபர் 17 கடவுச்சீட்டுகளுடன் அமைச்சின் அலுவலகத்திலிருந்து வெளியேறியதும் தெரியவந்துள்ளது. அமைச்சர் கடவுச்சீட்டுகளை பெறச்சொன்னார் என தெரிவித்தே அவர் கடவுச்சீட்டுகளை பெற்றதாகவும், சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மகிழ்ச்சியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சீன நிதியுதவியின் கீழ் 1996 வீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மொரட்டுவ, பெடரிவத்த பகுதியில் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் ஊடாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கென 575 வீடுகள் மற்றும் கொட்டாவ பகுதியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீடமைப்பு திட்டத்தின் ஊடாக 108 வீடுகள் மூத்த கலைஞர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய மேலும் குறிப்பிடுகையில்,

“இந்த வீடமைப்பு திட்டத்தை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்ததை முன்னிட்டு நாம் சீன அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றோம். வீடு என்பது குடும்பத்துக்கு, நபருக்கு அரவணைப்பை வழங்கும் ஒரு இடமாகும். பிரஜை என்ற அடிப்படையில் கிடைக்க வேண்டிய நல்லதொரு வாழ்க்கைக்கும், பண்புமிக்க வாழ்க்கைக்கும் பாதுகாப்பை வழங்கக்கூடிய ஓர் இடமாகும். வீடு மாத்திரமல்ல, பலம்மிக்க குடும்பம், சமூகத்தைக் கட்டியெழுப்புவதும் அரசுக்கு அவசியமானது. விசேடமாகப் பெண்கள் மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பு, அவர்களின் தேவைகளுக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் மிகவும் முக்கியமானது.

புறநகர் பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறுவோர் மிகவும் நெருக்கடி நிறைந்த வாழ்க்கையை வாழுகின்றனர்.

அதேபோல் வீடு ஒன்று இல்லாததால் சிலர் மிகவும் பாதுகாப்பற்ற வாழ்க்கையை வாழுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் இன, மத, பாலின சமூகத்தன்மை உள்ளிட்ட எந்தவொரு பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியான, பண்புமிக்க வாழ்க்கையை வாழ்வதற்கு பொருத்தமான சூழலை அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். இதற்கென சீன அரசாங்கத்திடமிருந்து எமக்கு கிழ்க்கப்பெறும் இந்த நிதியுதவியைப் போன்று இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கப்படும் ஒத்துழைப்புக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்றார்.

இந்த நிகழ்வில், நகர அபிவிருத்தி, இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் , வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சர் அனுர கருணாதிலக, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சர் டி.பீ.சரத், சீன தூதுவர் அலுவலகத்தின் பொருளாதார மற்றும் வணிக ஆலோசகர் டென்க் யான் டி, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் உட்பட அரச அதிகாரிகள், சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-06)

## இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நத்தார் நிகழ்வுகள்



*கொழும்பு, டிசெ 27*

*55ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் நத்தார் இன்னிசை நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.*

*குறித்த நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜெஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், வடமாகாண ஆளுநர் வேதநாயகனும் கலந்து கொண்டுள்ளார்.*

*நேற்று பிற்பகல் 6 மணியளவில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் கிளிநொச்சியில் உள்ள பிரதான திருச்சபைகளின் பாடகர் குழுவினரும், இராணுவத்தினரும் இணைந்து பாடல் இசைத்தனர்.*

*மேலும், நத்தார் வாழ்த்துச் செய்தியை யாழ். ஆயர் வழங்கினார். இந்நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள், மக்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர் (ஐ)*








இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2024 இல் வெளியிடப்பெற்றது.